[2002 மே 9

332—

நகரப் பேருந்து

***8730—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து தாம்பரத்திற்கு நேரடியாகச் செல்ல நகரப் பேருந்து வசதி செய்துதர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வில்லிவாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து தாம்பரத்திற்கு நேரடியாகச் செல்ல நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. நெப்போலியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கத்திலிருந்து நேரடியாக தாம்பரத்திற்கு பேருந்து இல்லாததால் அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் ரொம்ப சிரமப்படுகிறார்கள். வில்லிவாக்கம் பகுதியிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கிண்டி, பல்லாவரம், தாம்பரம் போன்ற இடங்களில் இருக்கிற தொழிற்சாலைகளுக்கு வேலைக்குப் போகிறார்கள். அவர்கள் அப்படிப் போகவேண்டுமானால், திருமங்கலத்தில் இருக்கிற பஸ் டெப்போவுக்கு வந்துதான் பஸ் பிடித்துப் போக வேண்டியிருக்கிறது. பைக்கிலேயோ, ஸ்கூட்டரிலேயோ, சைக்கிளிலேயோ வந்து அங்கே வண்டியை நிறுத்திவிட்டு அங்கேயிருந்து பஸ் பிடித்துப்போக வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் நிறைய பேர் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்தே வந்து திருமங்கலம் பஸ் டெப்போவிலிருந்து பஸ் பிடித்துப் போகிறார்கள். அதேமாதிரி சிலபேர் அந்தப் பக்கம் உள்ள பாடிக்கு ஒரு கிலோ மீட்டர் நடந்து சென்று பாடியில் இருக்கிற பஸ் ஸ்டேண்டுக்கு வந்து, ஆவடி, அம்பத்தூரிலிருந்து வருகிற பஸ்களைப் பிடித்துப் போகிறார்கள். ஆவடி, அம்பத்தூரிலிருந்து வருகிற பஸ்களில் ஏற்கெனவே கூட்டம் நிரம்பி வருவதால் ஏறுவதற்கு ரொம்ப சிரமப்படுகிறார்கள். திருமங்கலம் டெப்போவுக்குப் போனாலும் ஏற்கெனவே அண்ணா நகர் பகுதியில்

2002 மே 9]

இருக்கிற மக்கள் ஏறி உட்கார்ந்திருப்பதால் அங்கேயும் ரொம்ப சிரமப்படுகிறார்கள். அதனால் வில்லிவாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து நேரடியாக தாம்பரத்திற்கு பஸ் விட்டால் ரொம்ப நல்லாயிருக்கும். அந்தப் பகுதி மக்கள் சிரமத்தைப் போக்குகின்ற வகையிலே இந்த அரசு உடனடியாக இரண்டு பேருந்துகளை வில்லிவாக்கத்திலிருந்து நேரடியாக தாம்பரத்திற்கு இயக்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி மற்றும் செங்குன்றத்திலிருந்து வீல்ஸ் இந்தியா சந்திப்பு மற்றும் 100 அடி சாலை வழியாக தாம்பரம் நகருக்கு ஏறத்தாழ 44 நகரப் பேருந்து நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த 44 நடைகளையும் வில்லிவாக்கம் பகுதி மக்கள் தாம்பரத்திற்குச் செல்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் வில்லிவாக்கத்திலிருந்தும், வில்லிவாக்கம் வழியாகவும் நகரின் பல்வேறு பகுதிகளுக்கு ஏறத்தாழ 145 வழித்தடங்களில் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பகுதி பகுதியாக இயக்கப்படுகிற இந்த 145 வழித்தடங்களில் ஓடுகின்ற பேருந்துகளையும் வில்லிவாக்கம் பகுதி மக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். இருந்தபோதிலும், வில்லிவாக்கம் நகரப்பேருந்து நிலையத்திலிருந்து மெயின் ரோடுக்கு 200 மீட்டர் தூரம்தான் இருக்கிறது. அந்த 200 மீட்டர் தூரத்திலிருந்து 44 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆகவே வில்லிவாக்கம் பகுதி மக்கள் 200 மீட்டர் தூரத்திலிருந்து வருகிற பேருந்து வசதிகளையும் பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வளவு வசதிகள் இருந்தபோதிலும் மேலும் கூடுதலாகவும் நேரடியாகவும் வில்லிவாக்கத்திலிருந்து தாம்பரத்திற்கு பேருந்து வசதி வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இருந்தாலும் கூடுதல் வசதியாக மக்களுடைய நலன் கருதி அதைப்பற்றியும் இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 333, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.